என்றும் நம் நினைவில்

லீ குவான் இயூ

1923-2015

நவீன சிங்கப்பூரைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் லீ குவான் இயூ. ஜப்பானிய ஆட்சிக்காலத்தின் தாக்கத்தினால் உருவான அவரின் அரசியல் சிந்தனை அவரைக் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியில் பட்டம் பெற்று 1950ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்குத் திரும்பிய சிறிது காலத்திலேயே அவர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். 1954ஆம் ஆண்டில், அவர் ஒத்த எண்ணம் கொண்ட சிலருடன் இணைந்து மக்கள் செயல் கட்சியை நிறுவினார்.

திரு லீ 1955ஆம் ஆண்டில் சுதந்திரத்திற்கு முந்திய சிங்கப்பூரின் சட்டமன்றத்திற்குத் தேர்வுசெய்யப்பட்டு 1959ஆம் ஆண்டில் தன்னாட்சி சிங்கப்பூரின் பிரதமரானார். 1963ஆம் ஆண்டில் மலேசியாவுடன் இணைவதிலும் 1965ஆம் ஆண்டில் அதனிடமிருந்து பிரிவதிலும் நாட்டை வழிநடத்திய திரு லீ, மூன்றாம் உலக நாடாக இருந்த சிங்கப்பூர் முதலாம் உலக நாடாக உருமாறுவதில் உந்து சக்தியாகச் செயல்பட்டார். 1990ஆம் ஆண்டில் அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். இருப்பினும், 2011ஆம் ஆண்டுவரை தொடர்ந்து அமைச்சரவையில் பணியாற்றினார். அப்போது அவருக்கு 87 வயது. 20ஆம் நூற்றாண்டில் ஆசியாவின் வளர்ச்சியைத் தூண்டிய ஜாம்பவான்களில் ஒருவர் என்ற முறையில் அவர் ஆசியாவின் உன்னத அரசியல் மேதையாக உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டார்.

இந்தக் கண்காட்சி சிங்கப்பூருக்கு லீ குவான் இயூ வழங்கிய அளப்பரிய பங்களிப்புகள், அவரின் அனைத்துலகப்புகழ், அவரையும் அவரின் தலைமுறைத் தலைவர்களையும் செதுக்கிய சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் நினைவாக அமைகிறது.

வளர்ச்சி ஆண்டுகள்
1923-1950

மேற்கோள்
“மலாயாவில் உள்ள நாம், நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் ஆதிக்கம் அதன் கடைசிக் கட்டத்திற்குள் நுழைவதை இப்போது காண்கிறோம். மலாயா தவிர, தென்கிழக்காசியாவில் காலனித்துவ ஏகாதிபத்தியம் இறந்துவிட்டது. அது ஒரு முடிவுக்கு வருவதை நமது தலைமுறை பார்க்கும்.”

- லீ குவான் இயூ, மலாயா மண்டபத்தில் மலாயா ஃபாரம் நிகழ்வில் ஆற்றிய உரை, 28 ஜனவரி 1950

1923ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று சிங்கப்பூரில் பிறந்த லீ குவான் இயூ, 1940ஆம் ஆண்டின் சீனியர் கேம்பிரிட்ஜ் தேர்வுகளில் ராஃபிள்ஸ் கல்வி நிலையத்தின் தலைசிறந்த மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அதைத் தொடர்ந்து அவர் ராஃபிள்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். அவர் லண்டனில் சட்டம் படிக்க விரும்பினார். ஆனால், அவரின் திட்டங்கள் இரண்டாம் உலகப் போரினால் தடைப்பட்டன.

1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று பிரிட்டிஷார் சிங்கப்பூரை ஜப்பானியரிடம் ஒப்படைத்த பின், பல சீனர்களின் உயிரைப் பறித்த “சூக் சிங்” (சுத்தப்படுத்துவதன் மூலம் நீக்குதல்) எனப்படும் சீனர்களுக்கு எதிரான ஜப்பானிய இராணுவ நடவடிக்கையில் கொல்லப்படாமல் திரு லீ நூலிழையில் உயிர்த் தப்பினார். “சூக் சிங்” சோதனைக்காக ஜாலான் பசாருக்கு சென்றிருந்த அவர், ஏதோ தவறு நடக்கிறது என்று உணர்ந்து, அனுமதி பெற்று வரிசையிலிருந்து வெளியேறினார். அன்றிரவு தன் தோட்டக்காரரின் உதவியோடு ஓளிந்துகொண்டு, மறுநாள் அந்த நடவடிக்கையிலிருந்து தற்செயலாக விடுவிக்கப்பட்டார். தான் அரசியலில் நுழையவில்லை; ஜப்பானிய ஆட்சிக்காலம்தான் அரசியலைத் தன்னிடம் கொண்டுவந்தது என்று பின்னாளில் அவர் நினைவுகூர்ந்தார். தங்கள் விதியைச் சிங்கப்பூரர்கள் தங்கள் கைகளுக்குள் கொண்டுவராவிடில், என்றென்றைக்கும் அவர்கள் இந்தப் பெரிய நாடுகளின் தயவிலேயே காலந்தள்ள வேண்டியிருக்கும் என்பதை அந்தக் கொடுமையான ஆட்சிக்காலம் அவருக்கு உணர்த்தியது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் மலாயா ஃபாரமும்

லீ குவான் இயூ இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தன் படிப்பைத் தொடர்ந்தார். அவர் முதலில் லண்டன் பொருளாதாரப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் 1947ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து இரட்டை முதல்நிலை ஹானர்ஸ் பட்டம் பெற்று, இறுதிச் சட்ட ட்ரைபோஸ் II ஹானர்ஸ் பட்டியலில் சிறப்பு நட்சத்திரத் தேர்ச்சி பெற்றார். திரு லீ இங்கிலாந்தில் இருந்தபோது, கோ கெங் சுவீ, டோ சின் சாய் ஆகியோருடன் இணைந்து மலாயா ஃபாரம் குழுவில் சேர்ந்தார். அவர்கள் இருவரும் பின்னாளில் மக்கள் செயல் கட்சியை உருவாக்குவதில் திரு லீயுடன் கைகோத்தனர். மலாயா ஃபாரம் குழுவில் இருந்தவர்கள், ஒரு சுதந்திர மலாயாவை (இது சிங்கப்பூரையும் உள்ளடக்கும்) உருவாக்கும் நோக்கத்துடன் இயங்கிக் கொண்டிருந்த பிரிட்டனில் உள்ள அரசியல் உணர்வுமிக்க மலாயா மாணவர்களாவர். திரு லீ 1950ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வழக்குரைஞராகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்ட பிறகு நாடு திரும்பினார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கேம் ஆற்றோரமாக வாசிக்கிறார், 1947

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

கேம்பிரிட்ஜில், 1947-1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்க திரு லீக்கு ஓர் இடம் வழங்கிய ஃபிட்ஸ்வில்லியம் ஹவுசின் நெறிமுறைக் கண்காணிப்பாளர் W. S. தாட்ச்சருடன் லீ குவான் இயூவும் குவா கியொக் சூவும், 21 ஜூன் 1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

லீ குவான் இயூ தன் படிப்புக்காக இங்கிலாந்து செல்வதற்கு முன் குவா கியொக் சூவுடன், 5 செப்டம்பர் 1946

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

இருவரும் படித்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் குவா கியொக் சூவுடன், 1947-1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகச் சட்டப் பள்ளி நூலகத்தில், 1947-1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சிங்கப்பூரையும் மலாயாவையும் சேர்ந்த சக மாணவர்களுடன் இரவு விருந்தில் கலந்துகொண்ட லீ குவான் இயூவும் குவா கியொக் சூவும், 1949

இதில் E. W. பார்க்கர் (மேல் வரிசை, இடமிருந்து நான்காவது) மற்றும் யொங் பங் ஹூவ் (அமர்ந்திருப்பவர், வலமிருந்து இரண்டாவது) கலந்துகொண்டனர். பார்க்கர் 1964ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டுவரை அமைச்சரவை அமைச்சராகப் பணியாற்றினார். யொங் 1990ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டுவரை சிங்கப்பூரின் தலைமை நீதிபதியாக இருந்தார்.

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

குவா கியொக் சூவுடன் பட்டமளிப்பு நிழற்படம், 1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன்,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்

பட்டமளிப்பு நிழற்படம், 1949

திருமதி லீ குவான் இயூ சேகரிப்பின் ஆதரவுடன், சிங்கப்பூர்
தேசிய ஆவணக் காப்பகம்

லீ குவான் இயூ, 1960கள்

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

வழக்குரைஞர் தலை அங்கியும் கொள்கலனும், 1949

வழக்குரைஞராகப் பணியாற்ற அனுமதி பெற்ற பின், லீ குவான் இயூவும் குவா கியொக் சூவும் வழக்குரைஞர் தலை அங்கிகள் வாங்கினர். தலை அங்கியும் மேலங்கியும் தயாரிப்பதில் லண்டனில் புகழ்பெற்ற ரேவன்ஸ்க்ரொஃப்ட் நிறுவனத்தால் இவை செய்யப்பட்டன.

லீ குவான் இயூவின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

ரொலக்ஸ் ஓய்ஸ்டர் பெர்பெட்சுவல் கைக்கடிகாரம், 1953

இந்தக் கைக்கடிகாரம் 1953ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று சிங்கப்பூர் அஞ்சல், தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தால் லீ குவான் இயூவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஒரு சம்பள சர்ச்சை குறித்த பஞ்சாயத்து முயற்சிகளில் அவர் சங்கத்திற்கு வெற்றியைத் தேடித்தந்தார். இறுதியில், ஏறத்தாழ 1,000 எழுத்தர்கள் 28 மாத சம்பள பாக்கியைப் பெற்றனர்.

லீ குவான் இயூவின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

கண்ணாடி மூலத் தகடு, 1955

இந்தக் கண்ணாடி மூலத் தகடு 1955ஆம் ஆண்டு சிங்கப்பூர்ப் பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சியின் வேட்பாளரான லீ குவான் இயூவின் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்டது. இந்தத் துண்டுப் பிரசுரம் 2 ஏப்ரல் 1955 என்ற வாக்களிப்புத் தேதியைக் குறிப்பிடுவதோடு, சுதந்திரத்திற்கும் ஊழியர்களின் உரிமைகளுக்கும் திரு லீ பக்கபலமாக இருப்பதை அறிவிக்கிறது.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

அமைச்சரின் சிவப்புப் பெட்டி, 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி

இந்தச் சிவப்புப் பெட்டி லீ குவான் இயூ அரசியல் பதவியில் இருந்தபோது அவரால் பயன்படுத்தப்பட்டது. இதில், தாட்கள், உரை வரைவுகள், கடிதங்கள், வாசிப்புகள், குறிப்புகள், அவரின் உத்தரவுகள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் என அவரின் பணிசார்ந்தவை இருந்தன. பூட்டப்பட்ட இந்தச் சிவப்புப் பெட்டி ஒவ்வொரு நாள் காலை 9 மணிக்குத் திரு லீ யின் அலுவலகம் வந்துசேரும் என்று 1997ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டுவரை திரு லீ யின் முதன்மை தனிப்பட்ட செயலாளராக இருந்த கல்வி அமைச்சர் ஹெங் சுவீ கியாட் குறிப்பிட்டுள்ளார். திரு லீ யின் செயலாளர்கள் உத்தரவுக் குறிப்புகளைக் கேட்டு எழுதுவதுடன், அவர் அலுவலகம் வந்துசேரும் முன்னர், திரு ஹெங் அவரின் உத்தரவுகள்படி செயல்படுவார். திரு லீ மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முதல் நாளான 2015ஆம் ஆண்டு பிப்ரவரி 4 அன்று இந்தச் சிவப்புப் பெட்டியை இறுதியாகப் பயன்படுத்தினார். இன்று, இது திரு லீ அவர்களின் சிங்கப்பூர்பால் கொண்டிருந்த உறுதியான கடப்பாட்டின் சின்னமாகயுள்ளது.

சிங்கப்பூரின் முதல் சட்டமன்றத்தின் சுவரொட்டி, 1955

இந்தச் சுவரொட்டி சிங்கப்பூரின் முதல் சட்டமன்றத்தைக் காட்டுகிறது. ரெண்டல் அரசியலமைப்பின் கீழ் சிங்கப்பூரின் முதல் பொதுத் தேர்தலில் தேர்வுசெய்யப்பட்ட 25 உறுப்பினர்கள் இதில் அடங்குவர். இது 22 ஏப்ரல் 1955 என்று தேதியிடப்பட்டுள்ளது. அன்றுதான் சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் இடம்பெற்றது. வேட்பாளர்களின் மத்தியில், தஞ்சோங் பகாரின் உறுப்பினர் லீ குவான் இயூவே மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் தனது தொகுதியில் வென்றார்.

திருமதி அனிதா பென்சனின் அன்பளிப்பு
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

தஞ்சோங் பகார் சட்டமன்ற இடைத்தேர்தல் துண்டுப் பிரசுரம், 1957

லண்டனில் சிங்கப்பூரின் சுதந்திரம் குறித்து நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து, டேவிட் மார்ஷல் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார். 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று, அவர் லீ குவான் இயூவை ராஜினாமா செய்யுமாறும் மீண்டும் ஓர் இடைத்தேர்தலில் போட்டியிடுமாறும் சவால்விடுத்தார். திரு லீ உடனே சவாலை ஏற்றுக்கொண்டார். ஆனால் தான் அரசியலிலிருந்து நிரந்தரமாக ஓய்வு பெறப்போவதாக இரு நாட்களுக்குப் பிறகு மார்ஷல் அறிவித்தார். லீ குவான் இயூ தஞ்சோங் பகார் இடைத்தேர்தலில் போட்டியிட்டு வாகை சூடினார்.

தஞ்சோங் பகார் வாக்காளர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரம் ஒரு வெளிப்படையான கடிதத்தைக் கொண்டுள்ளது. காலனி ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, சுதந்திரமான, கம்யூனிஸ்ட் அல்லாத ஒரு மலாயாவை உருவாக்கும் மக்கள் செயல் கட்சியின் கடப்பாட்டை இக்கடிதம் விளக்குகிறது. மேலும், திரு லீயின் தகுதிகளை, குறிப்பாக, தொழிற்சங்கங்கள் பலவற்றுக்கு அவர் சட்ட அலோசகராகப் பணியாற்றி வந்ததை அது குறிப்பிடுகிறது.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

சட்டமன்றப் பொதுத் தேர்தல் துண்டுப் பிரசுரம், 1959

இது 1959ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான மக்கள் செயல் கட்சி துண்டுப் பிரசுரம். லீ குவான் இயூ கட்சியின் தலைமைச் செயலாளர் என்றும் தஞ்சோங் பகாருக்கான வேட்பாளர் என்றும் இதில் ஒரு சிறப்புக் குறிப்பு உள்ளது. அவரின் தகுதிகளைச் சிறப்பித்துக் கூறுவதோடு, இத்துண்டுப் பிரசுரம் திரு லீக்கு இருந்த ஆங்கில, மாண்டரின், மலாய் மொழித்திறனையும் குறிப்பிடுகிறது. 51 இடங்களில் 43 இடங்களை வென்ற மக்கள் செயல் கட்சி , தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது. அதையடுத்து, லீ குவான் இயூ தன்னாட்சி சிங்கப்பூரின் முதல் பிரதமரானார்.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

இணைப்புக்கான போராட்டம்-மலாய், ஆங்கில, சீன பதிப்புகள், 1961

1961ஆம் ஆண்டு செப்டம்பர் 13 முதல் அக்டோபர் 9 வரை லீ குவான் இயூ ஆங்கிலம், மாண்டரின், மலாய் ஆகிய மொழிகளில் 12 வானொலித் தொடர் உரைகளை நிகழ்த்தினார். மொத்தம் 36 ஒலிபரப்புகள் இடம்பெற்றன. கம்யூனிஸ்டுகளின் இலக்குகள், உத்திகள், அமைப்புமுறை ஆகியவற்றை அம்பலப்படுத்தும் நோக்கில் அந்தத் தொடர் உரைகள் அமைந்திருந்தன. சட்டமன்றத்தில் மக்கள் செயல் கட்சி ஓரே ஓர் இட வித்தியாசத்தில் பெரும்பான்மை பெற்றிருந்த நேரத்தில், நிலைமையை கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக மாற்றியமைக்க இந்தத் தொடர் உரைகள் உதவின. பின்னாளில் அந்தத் தொடர் உரைகள் தொகுக்கப்பட்டு இணைப்புக்கான போராட்டம் என்ற தலைப்பின்கீழ் நான்கு அதிகாரத்துவ மொழிகளிலும் வெளியிடப்பட்டன.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

சொற்பொழிவு மேடை, 1970கள்

1970களில், பிரதமர் லீ குவான் இயூ தேசிய அரங்கத்தில் இந்தச் சொற்பொழிவு மேடையில் நின்று தன் வருடாந்திர தேசிய தினப் பேரணி உரையை நிகழ்த்தினார்.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு

மெர்டேக்காவுக்கான (சுதந்திரத்துக்கான) பாதை (1950-1965) - பாகம் 1

மேற்கோள்

“மலாயா மக்கள் ஒன்றிணைவதற்கான நேரம் வந்துவிட்டது. ஏனென்றால் நமது சொந்த நாட்டில் நாம் முதலாளிகளாக இருந்தாலொழிய நம்மால் இந்தச் சுரண்டலை நிறுத்த முடியாது. எனவே, அதுவே சரிசெய்யப்பட வேண்டிய முதல் விஷயமாகும். நாம் சுதந்திரம் பெற்றாக வேண்டும்.”

- லீ குவான் இயூ, ஒரு தேர்தல் பிரசாரத்தில், 21 மார்ச் 1955

தொழிற்சங்கங்களுக்குச் சட்ட ஆலோசகர்

1952ஆம் ஆண்டில், லீ குவான் இயூ காலனித்துவ அரசாங்கத்துடனான சம்பளப் பேச்சுவார்த்தைகளில் அஞ்சல், தொலைத்தொடர்பு சீருடை ஊழியர் சங்கத்தைப் பிரதிநிதித்தார். அவர் அஞ்சல் ஊழியர்கள் அடக்குமுறையுடன் நடத்தப்பட்டதை அம்பலப்படுத்தினார். ஆனால் பேச்சுவார்த்தைகளில் அமைதியான, மிதவாதமான அணுகுமுறையைப் பின்பற்றுமாறு அவர்களுக்கு அறிவுரை கூறினார். பேச்சுவார்த்தை மூலம் அஞ்சல் ஊழியர்களுக்கு ஒரு நல்ல முடிவை வெற்றிகரமாகப் பெற்றுத்தந்ததைத் தொடர்ந்து திரு லீக்குப் பரவலான விளம்பரம் கிடைத்தது. விரைவில், அதிகமான தொழிற்சங்கங்களும் குலமரபுச் சங்கங்களும் திரு லீயைத் தங்கள் சட்ட ஆலோசகராக அமர்த்திக்கொள்ள அவரை அணுகத் தொடங்கின.

மக்கள் செயல் கட்சியின் உருவாக்கம்

இங்கிலாந்திலிருந்து நாடு திரும்பிய சில மாணவர்களுடன் இணைந்து லீ குவான் இயூ அரசியலமைப்பு வழிமுறைகள் மூலம் சுதந்திரத்திற்காகப் போராட ஓர் அரசியல் கட்சியை அமைக்கும் யோசனையை உருவாக்கினார். டோ சின் சாய், கோ கெங் சுவீ, எஸ் ராஜரத்தினம், கென்னத் பைன், பிறகு சமாட் இஸ்மாயில், தேவன் நாயர் ஆகியோர் அடங்கிய குழு ஆக்ஸ்லி சாலையிலுள்ள திரு லீயின் வீட்டின் கீழ்த்தள உணவறையில் அடிக்கடி சந்தித்தது.

ஃபஜார் வழக்கு

1954ஆம் ஆண்டில் ஃபஜார் என்ற பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகையில் ஒரு கட்டுரையைப் பிரசுரித்ததற்காகத் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட எட்டு மலாயா பல்கலைக்கழக மாணவர்களைத் தற்காக்க லீ குவான் இயூ அணுகப்பட்டார். அரசி ஆணைபெற்ற வழக்குரைஞர் டி என் ப்ரிட்டுடன் இணைந்து திரு லீ அந்த மாணவர்களை வெற்றிகரமாகத் தற்காத்தார். சிறிது காலத்திற்குப் பின், தேசிய சேவைப் பதிவு குறித்து கலவரம் செய்ததற்காக விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொண்டிருந்த சீன இடைநிலைப் பள்ளி மாணவர்களை அவர் பிரதிநிதித்தார். இவ்வாறே சீனவழிக் கல்வி கற்ற உலகிற்குள் திரு லீ அறிமுகமானார். அவர் விவரித்தது போல், “அது உயிர்த்துடிப்பு, பேராற்றல், புரட்சி நிறைந்து காணப்படும் ஓர் உலகமாக விளங்கியது.”

மக்கள் செயல் கட்சியின் அதிகாரபூர்வமான தொடக்கம்

இந்த மாணவர்கள் மூலம், கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணியில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த லிம் சின் சியொங், ஃபொங் சுவீ சுவான் ஆகியோருடன் திரு லீக்குப் பழக்கம் ஏற்பட்டது. திரு லீ அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கான தன் திட்டங்களை அவர்களிடம் கூறிய சிறிது காலத்திலேயே அவர்கள் ஆக்ஸ்லி சாலைக் குழுவில் சேர்ந்துகொண்டனர். 1954ஆம் ஆண்டு நவம்பர் 21 அன்று மக்கள் செயல் கட்சி விக்டோரியா நினைவு மண்டபத்தில் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்

லீ குவான் இயூ உட்பட மக்கள் செயல் கட்சி நான்கு வேட்பாளர்களைக் களமிறக்கியது. மக்கள் செயல் கட்சி மூன்று இடங்களை வென்றது. இதில் திரு லீ எந்த வேட்பாளரும் பெறாத அளவுக்கு ஆக அதிக வாக்குகளைப் பெற்று வென்றார். காலனித்துவ எதிர்ப்பு இயக்கத்தின் இயல்பான தலைவராக அவர் உருவெடுத்தார்.

வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி சிங்கப்பூர் அஞ்சல், தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தை சேர்ந்த எழுத்தர்களுக்கு 28 மாத சம்பள பாக்கியை வாங்கித்தந்த பின் சிங்கப்பூர் அஞ்சலக இயக்குநர் W. A. கூப்பருடன் கைகுலுக்குகிறார், 11 ஏப்ரல் 1953

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

சிங்கப்பூர் அஞ்சல், தொலைத்தொடர்பு ஊழியர் சங்க உறுப்பினர் ஒருவர் விக்டோரியா நினைவு மண்டபத்தில் திரு லீக்கு மாலை அணிவிக்கிறார், 11 ஏப்ரல் 1953

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

அரசி ஆணைபெற்ற வழக்குரைஞர் டி என் ப்ரிட்டை விமான நிலையத்தில் வரவேற்கிறார், 1954

ஃபஜார் என்ற பல்கலைக்கழக மாணவர் வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரைக்காக தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட எட்டு மலாயா பல்கலைக்கழக மாணவர்களைப் பிரதிநிதிக்க ப்ரிட் வரவழைக்கப்பட்டார். அந்த எட்டு மாணவர்களும் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

விக்டோரியா நினைவு மண்டபத்தில் மக்கள் செயல் கட்சியின் அதிகாரபூர்வமான தொடக்கக் கூட்டத்தில் உரையாற்றுகிறார், 21 நவம்பர் 1954

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மக்கள் செயல் கட்சியின் சிறப்பு கட்சி மாநாட்டுக்காக சிங்கப்பூர் அஞ்சல், தொலைத்தொடர்பு ஊழியர் சங்க வளாகத்தில், 13 பிப்ரவரி 1955 எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி போட்டியிடும் என்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. லீ குவான் இயூ உட்பட நான்கு வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

ஃஃபேரர் பார்க்கில் மெர்டேக்கா பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார், 17 ஆகஸ்ட் 1955

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

தன் முதல் தேர்தல் வெற்றிக்கு முந்திய நாளன்று லீ குவான் இயூ தன் ஆதரவாளர்களுடன், 1 ஏப்ரல் 1955

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

பாடாங்கில் ஒரு பொதுக் கூட்டத்தில் “மெர்டேக்கா” (சுதந்திரம்) என முழக்கமிடுகிறார், 15 ஏப்ரல் 1957

லீ குவான் இயூ அப்போதுதான் லண்டனிலிருந்து திரும்பியிருந்தார். அவர், சிங்கப்பூரின் தன்னாட்சி குறித்த அரசியலமைப்புப் பேச்சுகளுக்காக சென்றிருந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் ஓர் உறுப்பினராக இடம்பெற்றிருந்தார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மெர்டேக்காவுக்கான (சுதந்திரத்துக்கான) பாதை (1950-1965) - பாகம் 2

மேற்கோள்

“மக்களின் வரலாற்றில் நீண்ட காலத்தில் எப்போதாவது ஒரு முறை மாபெரும் மாற்றம் ஏற்படும் தருணம் வரும். அத்தகைய தருணம் நம் வாழ்வில் இன்றிரவு வந்துள்ளது... நாம் சிங்கப்பூரின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலம் நம் உள்விவகாரங்களுக்கு மட்டுமே மக்களின் அதிகாரங்கள் நீடிக்கும். உண்மையிலேயே நமக்கு வேண்டியது அதுவல்ல. அது இணைப்பையும் மெர்டேக்காவையும் நோக்கி முன்னெடுத்து வைக்கும் ஓர் அடி மட்டுமே.”

- லீ குவான் இயூ, 1959ஆம் ஆண்டு சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சியின் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், 3 ஜூன் 1959

வெளிப்படையான முன்னணிக் கூட்டணி

லீ குவான் இயூவும் மக்கள் செயல் கட்சியில் உள்ள அவரின் கம்யூனிஸ்ட் அல்லாத சகாக்களும் காலனித்துவத்தை எதிர்த்துப் போராட கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி உருவாக்க வேண்டும் என நம்பினர். ஆனால், இதனால் மக்கள் செயல் கட்சியில் அதிகாரப் பூசல்கள் அடிக்கடி மூளும் வாய்ப்பும் இருந்தது. திரு லீ இணைப்புக்கான போராட்டம் குறித்த தன் உரைகளில் மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியான ஃபோங் சொங் பிக்கை இரகசியமாகச் சந்தித்தார். திரு லீ அவருக்கு “த ப்ளென்” என்று பெயரிட்டிருந்தார். முழு அதிகாரம் பெற்ற ஒருவர் என்பதன் சுருக்கமே அப்பெயர்.

1959 பொதுத் தேர்தல்

முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தைக் கொண்டுவருதற்கான சிங்கப்பூரின் முதல் பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி 51 இடங்களில் 43 இடங்களைக் கைப்பற்றியது. அது ஒரு மகத்தான வெற்றியாக அமைந்தது. லீ குவான் இயூ தன்னாட்சி சிங்கப்பூரின் முதல் பிரதமரானார். இந்தத் தீவை அடுத்த சில பத்தாண்டுகளில் உருமாற்றிய பரந்த செயல்விளைவுடைய சமூக, பொருளாதார கொள்கைகளை அவர் உடனடியாக செயல்படுத்தத் தொடங்கினார்.

இணைப்பு மூலம் சுதந்திரம்

1961ஆம் ஆண்டு மே மாதம் மலாயா கூட்டரசின் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் சிங்கப்பூருடனான இணைப்பின் சாத்தியத்தை அறிவித்தார். இந்த விவகாரம் குறித்து எழுந்த உடன்பாடின்மை 1961ஆம் ஆண்டு ஜூலை மாதம் மக்கள் செயல் கட்சியில் ஒரு பிளவு ஏற்படச் செய்தது. லிம் சின் சியோங்கின் தலைமையிலான கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் முதலில் சட்டமன்றத்தில் உள்ள அரசாங்கத்தைக் கவிழ்க்க முனைந்தனர். அவர்களின் முயற்சி தோற்றுப் போனபோது, அவர்கள் பாரிசான் சோஷியலிஸ் கட்சியை அமைக்க பிரிந்து சென்றனர். தொழிற்சங்கங்களும் பிரிந்தன. மக்கள் செயல் கட்சிக்கு விசுவாசமாக இருந்தவர்கள் தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸை (NTUC) உருவாக்கினர். கம்யூனிஸ்ட் ஆதரவுச் சங்கங்கள் சிங்கப்பூர் தொழிற்சங்கங்கள் சங்கத்தை (SATU) அமைத்தன.

இது சிங்கப்பூரர்களின் இதயங்களையும் மனங்களையும் வெல்லும் ஒரு கடுமையான போராட்டத்தில் முடிந்தது. லீ குவான் இயூ கம்யூனிஸ்டுகளின் இலக்குகள், உத்திகள், அமைப்புமுறை ஆகியவற்றை அம்பலப்படுத்த தொடர் வானொலி ஒலிபரப்புகளை நிகழ்த்தியதுடன், 51 தொகுதிகளுக்கும் வருகையளித்தார். 1962ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் கூட்டரசுடன் இணைவதற்காக மக்கள் செயல் கட்சி முன்வைத்த திட்டம் 71% வாக்குகளை வென்றது. ஓராண்டுக்குப் பின், 1963ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று சிங்கப்பூர் மலேசியாவின் அங்கமானது. ஐந்து நாட்களுக்குப் பின், 1963ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாரிசான் சோஷியலிஸின் 13 இடங்களுடன் ஒப்புநோக்க மக்கள் செயல் கட்சி 37 இடங்களை வென்றது. பின்னாளில் டாக்டர் கோ கெங் சுவீ வர்ணித்தது போல், திரு லீயின் உன்னத அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் கம்யூனிஸ்டுகளின் கடும் எதிர்ப்பிலிருந்து மக்கள் செயல் கட்சி பிழைத்துவிட்டது.

பிரிவினை

ஆனால், இணைப்பு ஒரு மகிழ்ச்சியற்ற அனுபவமாக மாறியது. மக்கள் செயல் கட்சி 1964ஆம் ஆண்டு மலேசிய பொதுத் தேர்தலில் போட்டியிட்டது, ஆனால் அந்தத் தீபகற்பத்தில் அது ஓர் இடத்தை மட்டுமே வென்றது. 1964ஆம் ஆண்டு ஜூலை 21 அன்று சிங்கப்பூரில் இனக் கலவரங்கள் வெடித்தன. லீ குவான் இயூ இனவாதம் அல்லாத ஒரு “மலேசியன் மலேசியா” வுக்கு பிரசாரம் செய்ததன் விளைவாக சிங்கப்பூருக்கும் கோலாலம்பூருக்கும் இடையே உறவுகள் மோசமடைந்தன. 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று சிங்கப்பூர் மலேசியாவிடமிருந்து பிரிந்தது. திரு லீ இந்த “வேதனையான தருணத்தில்” தொலைக்காட்சியில் அழுத காட்சி எந்தச் சிங்கப்பூரரும் மறக்க முடியாத ஒன்று.

(முதன்மைப் படம்) நகர மண்டபத்திலுள்ள அமைச்சரவை அறையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில், 1960கள்

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

யாங் டி பெர்துவான் நெகாரா (நாட்டின் தலைவர்) என்ற பதவியை யூசோஃப் பின் இஷாக் ஏற்றபோது நகர மண்டபப் படிக்கட்டுகளில் உரையாற்றுகிறார், 3 டிசம்பர் 1959

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

லண்டனில் நடைபெறவிருந்த சிங்கப்பூர்-மலேசிய இணைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகளுக்காக துங்கு அப்துல் ரஹ்மான் புறப்படுமுன் அவருடன் பாயா லேபார் அனைத்துலக விமான நிலையத்தில், 16 நவம்பர் 1961

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

சிங்கப்பூரை “ஆசியாவிலேயே தூய்மையும் சுகாதாரமும் மிக்க நகரங்களில் ஒன்றாய்” உருவாக்க உதவுமாறு நகர்ப்புறத்தைத் துப்புரவாக்கும் இயக்கத்தின்போது தஞ்சோங் பகார் குடியிருப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறார், 23 நவம்பர் 1959

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மலேசியாவுடனான இணைப்பு குறித்த பிரசாரத்தில் துண்டறிக்கைகள் விநியோகிக்கிறார், 26 ஆகஸ்ட் 1962

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

நாட்டு விசுவாச வாரத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் ரேடியோ மலாயா ஒலிபரப்பு, 2 டிசம்பர் 1959

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சிங்கப்பூர் சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடருக்காக அமைச்சர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் நகர மண்டபத்திலிருந்து சட்டமன்ற இல்லத்திற்கு வழிநடத்திச் செல்கிறார், 1 ஜூலை 1959

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

ஃபுல்லர்ட்டன் சதுக்கத்தில் நடைபெற்ற மதிய உணவுநேரத் தேர்தல் பிரசாரத்தைத் திரளாகக் காணவந்த மக்கள் முன் உரையாற்றுகிறார், 25 செப்டம்பர் 1963

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

இனக்கலவரங்கள் நிகழ்ந்த சமயத்தில் கேலாங் செராய் குடியிருப்பாளர்கள் சொல்வதைச் செவிமடுக்கிறார், 24 ஜூலை 1964

அதே நாள் தொலைக்காட்சியில் திரு லீ, கலவரங்களில் பாதிக்கப்பட்டோருக்கு உதவ உறுதி தெரிவித்து, தன் அரசாங்கம் அச்சத்தைப் போக்கி நம்பிக்கையை நிலைநாட்டும் என்றார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

தேசிய அரங்கில் முதல் மலேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டில் முடிவுரை நிகழ்த்துகிறார், 6 ஜூன் 1965

இனவாதத்தை எதிர்த்துப் போராட உறுதிபூண்ட திரு லீ, "மலேசியன் மலேசியா" உருவாவதை வலியுறுத்தினார்.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

சிங்கப்பூர் மலேசியாவிடமிருந்து பிரிவது பற்றிய தொலைக்காட்சி செய்தியாளர் கூட்டத்திற்காக சிங்கப்பூர் ஒலிபரப்பு இல்லம் வந்துசேர்கிறார், 9 ஆகஸ்ட் 1965

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மேற்கோள்

“சிங்கப்பூரின் இரண்டு மில்லியன் மக்களின் உயிர்வாழ்வை உறுதிசெய்யும் பொறுப்பு எனக்குண்டு... பிற எதையும்விட, என் தலையாய கடமை என் சொந்த மக்களின் உயிர்வாழ்வு... அவர்கள் உயிர்வாழ்வார்கள் என்ற மனவுறுதியுடன் உள்ளேன். அவர்களுக்குள் போதுமான மனோதிடம் உள்ளது எனக் கருதுகிறேன்.”

– லீ குவான் இயூ, வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி, 14 ஆகஸ்ட் 1965

ஒரு முன்னேற்றகரமான, திறந்த, பொருளாதார அடிப்படையில் வெற்றிகரமான நாடாக உருமாற்றினார்.

சிங்கப்பூருக்கு அனைத்துலக அங்கீகாரம் பெறுதல்

சிங்கப்பூரை அனைத்துலக அரங்கில் இடம்பெற வைப்பது மிக முக்கியம் என லீ குவான் இயூ கருதினார். சிங்கப்பூரின் சுதந்திரத்திற்கு முன்பே, அக்காலத்திய முக்கியத் தலைவர்களை (நேரு, நாசர், டிட்டோ உட்பட) அவர் சந்தித்துவந்துள்ளார். மேலும், மலேசியா சார்பில் ஆப்பிரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அவர் பயணங்களை வழிநடத்தியிருக்கிறார். சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றதுமே இந்த அனுபவத்தை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

சட்ட விதிகளும் ஊழலற்ற தன்மையும்

லீ குவான் இயூ அரசியலமைப்பில் மாற்றங்களை அறிமுகப்படுத்தி சட்டவிதியை உள்ளூர்ச் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்தார். அரசாங்கத்தில் உயர்தர நேர்மையும் நாணயமும் இருப்பதை வலியுறுத்தினார். ஊழலை எதிர்த்து இடைவிடாமல் போராடினார். குறிப்பாக, அரசாங்க சேவை, நீதித் துறை போன்ற அமைப்புகளின் வலிமையையும் நேர்மையையும் பொறுத்தே நாட்டின் வெற்றி அமையும் என அவர் நம்பினார்.

சிங்கப்பூரருக்கான சிங்கப்பூர்

லீ குவான் இயூ இனம், மொழி, சமயம் ஆகியவற்றால் எவருக்கும் சலுகையோ பாகுபாடோ காட்டப்படாத, தகுதியாட்சி முறையில் இயங்கும் பல இன, பல மொழி, பல சமய சமுதாயம் ஒன்றைக் கற்பனை செய்தார். அவர் இனவாத அரசியல் கட்சிகளை வெறுத்துத் தள்ளி, இன, சமய நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கல்வித் துறையில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகவும், மாண்டரின், மலாய், தமிழ் ஆகியவற்றைத் தாய்மொழிப் பாடங்களாகவும் அறிமுகப்படுத்தி இருமொழிக்

(முதன்மைப் படம்) 1963ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற பின் விக்டோரியா நினைவு மண்டபத்தில் உரையாற்றுகிறார், 22 செப்டம்பர் 1963

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

பாடாங்கில் நடைபெற்ற சிங்கப்பூர் ஆயுதப் படைப் பயிற்சிக் கழக ஆணை வழங்கும் அணிவகுப்பு நிகழ்வில் புதிதாக ஆணைபெற்ற அதிகாரிகளுடன் உரையாடுகிறார், 16 செப்டம்பர் 1973

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

இந்தோனீசிய அதிபர் சுகார்த்தோவை மெர்டேக்கா மாளிகையில் சந்திக்கிறார், ஜக்கார்த்தா,
8 செப்டம்பர் 1982

பல ஆண்டுகள் இரு தலைவர்களும் இதுபோன்ற பல தனிப்பட்ட சந்திப்புகளை நடத்தினர்; சுகார்த்தோ இச்சந்திப்புகளை எம்பாட் மாத்தா (“நான்கு கண்கள்”) எனக் குறிப்பிட்டார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

சீனாவின் மூத்த துணைப்பிரதமர் டெங் சியாவ்பிங் சிங்கப்பூர் வந்தபோது அவருக்கு விருந்து அளிக்கிறார், 12 நவம்பர் 1978

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மழையையும் பொருட்படுத்தாது, வீடமைப்பு வளர்ச்சிக் கழகத் தலைவர் லிம் கிம் சானுடன் கம்போடிய இளவரசர் நொரொடாம் சிஹானுக் அவர்களுக்கு குவீன்ஸ்டவுனில் வரவேற்பு அளிக்கிறார், 18 டிசம்பர் 1962

1965ஆம் ஆண்டில் சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றபோது, அதை அங்கீகரித்த முதல் நாடுகளில் இளவரசர் சிஹானுக் ஆட்சியில் இருந்த கம்போடியாவும் ஒன்று.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

ஜூரோங் தொழிற்பேட்டையாய் உருவாக இருந்த இடத்தைப் பொருளியல் வளர்ச்சிக் கழகத் தலைவர் ஹோன் சுய் சென்னுடன் பார்வையிடுகிறார், 27 அக்டோபர் 1962

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

யாங் டி பெர்துவான் நெகாரா யூசோஃப் பின் இஷாக் அவர்களுடன் ஜூரோங் தொழிற்பேட்டையின் முன்னேற்றத்தைப் பார்வையிடுகிறார், 10 மே 1964

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

ஜூரோங் தொழிற்பேட்டைக்கு வருகை புரிந்தபோது ஓர் ஊழியரிடம் உரையாடுகிறார், 2 மே 1965

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

உயிர்வாழ்வும் தேச நிர்மாணமும் (1965-1990) - பாகம் 2

மேற்கோள்

“சிங்கப்பூர் பழைய துறைமுகமாய் இருந்த காலத்திற்கு நாம் திரும்பிச் செல்ல முடியாது. நாம் முன்னோக்கிச் சென்று உயரவேண்டும். நம் பொருளியலை விரிவுபடுத்தவேண்டும். தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவேண்டும். நம் அறிவையும் திறன்களையும் பெருக்கவேண்டும்.”

- லீ குவான் இயூ, தேசிய தினச் செய்தி, 8 ஆகஸ்ட் 1982

சிங்கப்பூரின் பொருளியல் அடித்தளத்தை உறுதிப்படுத்துதல்

தமது காலத்தில் வளரும் நாடுகளின் தலைவர்கள் மத்தியில் தனித்து விளங்கிய லீ குவான் இயூ, பன்னாட்டு நிறுவனங்களை வரவேற்றார். தொழில்மயமாதலுக்கும் சிங்கப்பூரை உலகோடு இணைக்கவும் அவற்றை ஒரு வாய்ப்பாகக் கருதினார். தொழிலியல் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தியது அவரது பொருளியல் நோக்கின் முக்கியக் கொள்கையாய்த் திகழ்ந்தது. முத்தரப்பு உறவை ஊக்குவிக்க தேவன் நாயருடனும் தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸுடனும் (NTUC) திரு லீ அணுக்கமாகப் பணியாற்றினார். சம்பளப் பிரச்சினைகள் குறித்து ஒரு கருத்திணக்கத்தை ஏற்படுத்த, தொழிற்சங்கங்கள், நிர்வாகங்கள், அரசாங்கம் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்டு 1972ஆம் ஆண்டில் தேசிய சம்பள மன்றம் அமைக்கப்பட்டது.

ஒரு நிதி மையத்தை உருவாக்குதல்

டாக்டர் கோ கெங் சுவீயுடன் இணைந்து லீ குவான் இயூ சிங்கப்பூரை ஓர் உலகளாவிய நிதி மையமாக உருவாக்க உதவினார். 1967ஆம் ஆண்டில், சிங்கப்பூர் நாணயங்களை வெளியிட சிங்கப்பூர் நாணய ஆணையாளர்கள் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டில், நாட்டின் மத்திய வங்கியாக சிங்கப்பூர் நாணய ஆணையம் நிறுவப்பட்டது. 1981ஆம் ஆண்டில், அரசாங்க இருப்புகளை முதலீடு செய்ய, சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது. அது தொடங்கிய காலத்திலிருந்து 2011ஆம் ஆண்டுவரை, திரு லீ அதன் தலைவராய்ப் பணியாற்றினார்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை

ஒவ்வொரு குடிமகனுக்கும் நாட்டில் உரிமை வழங்குவது லீ குவான் இயூவுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்தது. தேசத்தில் ஒவ்வொரு குடிமகனும் சொந்த வீட்டைக் கொண்டிருத்தல் அவர் கனவாக இருந்தது. எனவே, சிங்கப்பூரர்களுக்கு அடுக்குமாடி வீடுகளைக் கட்டி விற்கும் இலக்குடன் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தை அவர் அமைத்தார். சம்பளங்கள் உயர உயர, சிங்கப்பூரர்கள் வீடு வாங்க உதவவும் ஓய்வுக்காலத்தில் அவர்களுக்குப் போதுமான சேமிப்பு இருப்பதை உறுதிசெய்யவும் திரு லீ மத்திய சேம நிதி சந்தா விகிதங்களை உயர்த்தினார். 1984ஆம் ஆண்டில் அவர் தேசிய மருத்துவ சேமிப்புத் திட்டமான மெடிசேவைத் தொடங்கினார். வீடமைப்பு வளர்ச்சி கழகம், மத்திய சேம நிதி, மெடிசேவ் என்ற இந்தத் திட்டங்களும் அமைப்புகளும் இன்று சிங்கப்பூரின் சமூகக் கொள்கைகளின் மூலக்கோட்பாடுகளாகத் தொடர்ந்து விளங்குகின்றன.

அடித்தள அமைப்புகளை உருவாக்குதல்

மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நம்பிக்கையை வளர்க்க லீ குவான் இயூ மக்கள் கழகத்தை நிறுவி அதன் முதல் தலைவரானார். மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கில் தீவெங்கும் சமூக நிலையங்கள் கட்டப்பட்டன. மேலும் திரு லீ, “சிங்கப்பூரைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருப்போம்”, “மாண்டரின் மொழியில் அதிகமாகவும் கிளைமொழிகள் குறைவாகவும் பேசுங்கள்” போன்ற பல இயக்கங்களைத் தொடங்கினார். அவரும் அவர்தம் தலைமுறையைச் சார்ந்த சகாக்களும் தங்களை அரசியல் தலைவர்களாக மட்டுமல்லாமல் மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டுபவர்களாகவும் கருதினர்.

பிரவுண்ஸ்வேகில் உள்ள ரோலெய் கேமரா தொழிற்சாலைக்கு வருகை புரிகிறார், மேற்கு ஜெர்மனி, 30 செப்டம்பர் 1970

அங்கு பயிற்சி மேற்கொள்ள சிங்கப்பூரிலிருந்து முதன்முதலாகச் சென்றிருந்த தொழில்நுட்ப வல்லுநர்களைத் திரு லீ சந்தித்தார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

செய்க்கோ நிறுவனத்தால் அமைக்கப்பெற்று புதிதாகத் திறக்கப்பட்ட சிங்கப்பூர் டைம் தொழிற்சாலையைப் பார்வையிடுகிறார், 19 மார்ச் 1976

$30 மில்லியன் முதலீட்டுடன் 1,500 ஊழியர்களை வேலைக்கு அமர்த்திய அந்த ஜப்பானிய நிறுவனம், ஏற்றுமதிக்காகச் சிங்கப்பூரில் கடிகாரங்களைத் தயாரித்த முதல் நிறுவனமாகும்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்தில் உற்பத்தித்திறன் மாதத்தின் அதிகாரபூர்வத் தொடக்க விழாவில் உரையாற்றுகிறார், 11 நவம்பர் 1982

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

செயிண்ட் ஜோசஃப் கல்வி நிலையத்தின் நிறுவனர் தினக் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர் ஒருவருடன் பேசுகிறார், 15 மே 1967

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

குவீன்ஸ்டவுன் வீடமைப்புப் பேட்டையைச் சுற்றிப்பார்த்த போது இளம் குடியிருப்பாளர்களுடன் அளவளாவுகிறார், 2 மே 1965

முதன்முதலில் சிங்கப்பூர் மேம்பாட்டு அறக்கட்டளையாலும் (SIT) பின்னாளில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தாலும் (HDB) கட்டப்பட்ட குவீன்ஸ்டவுன், சிங்கப்பூரின் முதல் தன்னிறைவான குடியிருப்புப் பேட்டை எனப் பெயர்பெற்றது.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

தஞ்சோங் பகாரில் உள்ள கெண்டன்மண்ட் சாலையில் புதிதாகக் கட்டப்பட்ட கழக வீட்டிற்கு வருகை புரிகிறார், 10 ஏப்ரல் 1964

தஞ்சோங் பகார் பகுதியில் அன்று வசித்துவந்த பாட்டாளி வர்க்கத்தினரைப் பிரதிநிதிக்க விரும்பி, 1955ஆம் ஆண்டில் திரு லீ அப்பகுதியைத் தன் தொகுதியாகத் தேர்வுசெய்தார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்தில் 1982ஆம் ஆண்டின் தேசிய பணிவன்பு இயக்கத்தில் உரையாற்றுகிறார், 29 ஜூன் 1982

ஒருவருக்கொருவர் காட்டும் உண்மையான அக்கறையே சிங்கப்பூரர்களைப் பிணைக்கும் “சமூகப் பசை” என்று திரு லீ கூறினார்.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

நீ சூன் வட்டாரத்திற்கு மேற்கொண்ட வருகையின் போது சிறுவன் ஒருவனுடன் பேசுகிறார், 24 ஜூலை 1966

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

உயிர்வாழ்வும் தேச நிர்மாணமும் (1965-1990) - பாகம் 3

மேற்கோள்

“சிங்கப்பூரில் ஓர் அங்கமாக இருப்பதிலும் அதைத் தற்காப்பதிலும் பயனுள்ளது என்று மக்கள் உணர வேண்டும். இல்லையெனில், நம்மால் நீடிக்க முடியாது... பயன்மிக்க, மனநிறைவான வாழ்வுக்கான வாய்ப்புகள் உள்ள துடிப்புமிக்க, செழித்தோங்கும் சமுதாயமாக நம்மால் சிங்கப்பூரை உருவாக்க முடியும்.”

- லீ குவான் இயூ, தேசிய தினச் செய்தி, 8 ஆகஸ்ட் 1989

அனைத்துலக நல்லுறவுகளை ஏற்படுத்துதல்

அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், பிரிட்டன் போன்ற செல்வாக்குமிக்க நாடுகளுடன் சிங்கப்பூர் வலுவான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள லீ குவான் இயூ உதவினார். ஆசிய பசிபிக் வட்டாரத்தை நிலைப்படுத்தும் சக்தியாக அமெரிக்காவை அவர் வரவேற்றார். டெங் சியாவ்பிங்குடன் அவர் கொண்டிருந்த அணுக்கமான நட்பால் சீனாவுடனான உறவு 1980களிலிருந்து வலுவடைந்தது. திரு லீ அவர் காலத்திய முக்கிய உலகத் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

காமன்வெல்த் அமைப்பும் ஆசியானும்

உலக அரங்கில் சிங்கப்பூரின் குரல் கேட்கப்படுவதை லீ குவான் இயூ உறுதிப்படுத்தினார். 1971ஆம் ஆண்டில் திரு லீ தலைமை வகித்த காமன்வெல்த் நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூட்டத்தைச் சிங்கப்பூர் பொறுப்பேற்று நடத்தியது. திரு லீ தன் வெளியுறவு அமைச்சர் எஸ் ராஜரத்தினத்துடன் சேர்ந்து தென்கிழக்காசிய நாடுகள் அமைப்புக்கு (ஆசியான்) பலத்த ஆதரவளித்தார். வட்டார நிலைத்தன்மைக்கு ஆசியான் இன்றியமையாதது என்று திரு லீ கருதினார்.

சிங்கப்பூர் உலக வரைபடத்தில் இடம்பெறச் செய்தல்

திரு லீ சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் மீது தனிப்பட்ட அக்கறை எடுத்துக்கொண்டார். வட்டார விமானப் பாதைகளைக் காட்டிலும் அனைத்துலகப் பாதைகளில் கவனம் செலுத்துமாறு அந்நிறுவனத்திற்கு ஆலோசனைக் கூறினார். 1981ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கிய சாங்கி அனைத்துலக விமான நிலையத்தைக் கட்ட திரு லீ எடுத்த முடிவு, சிங்கப்பூர் இந்த வட்டாரத்தின் விமானத்துறை மையமாக உருவெடுக்க உதவியது.

தூய்மையான, பசுமையான சிங்கப்பூர்

திரு லீ தூய்மையான, பசுமையான சுற்றுச்சூழலில் நம்பிக்கைக் கொண்டவர். சிங்கப்பூர் ஒரு பூங்கா நகரமாகவும், பின்னாளில் பூங்காவில் ஒரு நகரமாகவும் உருமாறியதற்கு அவர் ஒரு தூண்டுகோலாகவும் முக்கியக் காரண கர்த்தாவாகவும் விளங்கினார். சிங்கப்பூர் ஆற்றையும் காலாங் ஆற்றுப் படுகையையும் சுத்தப்படுத்தும் மாபெரும் திட்டம் நிறைவுபெற 10 ஆண்டுகளாயின. இத்திட்டமும் சிங்கப்பூரின் நில வனப்புக்கு அழகு சேர்க்கும் நீர்வழிகளும் பூங்காக்களும் மரங்களும் திரு லீபுரிந்த சாதனைகளுள் நெடுநாள் நீடிக்கும் சாதனைகளாகும்.

தண்ணீர்க் கதை

சிங்கப்பூர் தண்ணீருக்காக மலேசியாவை நம்பியிருக்க வேண்டிய நிலை அளவிடற்கரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயமாக இருந்தது. தண்ணீர் குறித்து மலேசியாவுடன் நடந்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் லீ குவான் இயூவே மிக முக்கியமானவராக இடம்பெற்றிருந்தார். அவரின் தலைமைத்துவத்தின் கீழ், சிங்கப்பூர் தன் சொந்த நீர் வளங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது. தீவின் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட பகுதியை நீர்பிடிப்புப் பகுதிகளாக மாற்றியது, கடல்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகளை அமைத்தது, நியூவாட்டர் அல்லது மறுபயனீட்டு நீரை அறிமுகப்படுத்தியது போன்றவை சிங்கப்பூர் மேற்கொண்ட முயற்சிகளில் அடங்கும்.

அடுத்த தலைமுறைத் தலைமைத்துவம்

சிங்கப்பூர் தொடர்ந்து வெற்றி பெறவேண்டுமெனில், அரசாங்கத்தில் திறமையானவர்கள், குறிப்பாக சிறந்த அரசியல் தலைவர்கள் இருக்கவேண்டும் என லீ குவான் இயூ நம்பினார். 1988ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின், கோ சொக் டொங் அடுத்த பிரதமராகப் பதவியேற்க அவர் வழிவகுத்தார். 1990ஆம் ஆண்டில் பதவி விலகுவதற்கு முன், தான் ஒரு பிரதமராக இருந்து செய்யவேண்டிய இறுதிக் கடமையாக அவர் அதைக் கருதினார்.

(முதன்மைப் படம்) 21ஆம் நூற்றாண்டில் சிங்கப்பூருக்குத் தடையற்ற வர்த்தகத்தின் முக்கியத்துவம் குறித்து ஹோக்கைடோ மாநாட்டில் உரையாற்றுகிறார், 11 ஜூலை 1988

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனை வெள்ளை மாளிகையில் சந்தித்து உரையாடுகிறார், 19 ஜூன் 1981

லிண்டன் ஜான்சனில் தொடங்கி திரு லீ ஒவ்வொரு அமெரிக்க அதிபரையும் சந்தித்தார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சரை அவரது சிங்கப்பூர் வருகையின் போது இஸ்தானாவில் வரவேற்கிறார், 1 ஆகஸ்ட் 1988

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

பாயா லேபார் விமான நிலையத்தில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றில் புறப்படுகிறார், 19 ஜனவரி 1976

சிங்கப்பூரின் புகழையும் நன்மதிப்பையும் உலகிற்கு வெளிப்படுத்த ஒரு வெற்றிகரமான தேசிய விமான நிறுவனம் இருப்பது முக்கியம் என்பதைத் திரு லீ உணர்ந்தார்.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

தஞ்சோங் பகார் சமூக மன்றத்தில் மஞ்சட்கொன்றை மரக்கன்று ஒன்றை நடுகிறார், 12 டிசம்பர் 1971

சிங்கப்பூரின் மரம்நடும் இயக்கத்தின் தொடக்கமாக திரு லீ முதன்முதலில் 1963ஆம் ஆண்டு ஜூன் 16 அன்று ஃபேரர் சர்க்கஸில் ஒரு மெம்பாட் மரம் நட்டார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

சிங்கப்பூர் ஆற்றைப் பார்வையிடுகிறார், 2 செப்டம்பர் 1987

ஆற்றைச் சுத்தம் செய்யும் பத்தாண்டுப் பணியைத் திரு லீ தனது மிகப் பெரிய இலட்சியங்களில் ஒன்றாகக் கருதினார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

பாடாங்கில் தேசிய தின அணிவகுப்பில் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொள்கிறார், 9 ஆகஸ்ட் 1987

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

1988ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தஞ்சோங் பகாரில் வெற்றிபெற்ற பின் தன் ஆதரவாளர்களுக்கு நன்றி கூறுகிறார், 11 செப்டம்பர் 1988

இதுவே திரு லீ பிரதமராக இருந்து போட்டியிட்ட இறுதிப் பொதுத் தேர்தல்.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

1988ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் செய்தியாளர் கூட்டத்தில் பேசுகிறார், 3 செப்டமர் 1988

அடுத்த தலைமுறைத் தலைமைத்துவம் என்பது திரு லீக்கு முக்கியமாக இருந்தது. தனக்குப் பிறகு சிங்கப்பூரின் பிரதமராக கோ சொக் டொங்கை (அவருக்கு வலப்பக்கம் அமர்ந்திருப்பவர்) அவர் தயார்படுத்தினார்.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

அவர்தம் அரும்பெருஞ்சாதனை

மேற்கோள்

“...தன் மக்கள் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ, அவர்களின் பிள்ளைகள் மேலும் சிறந்த வாழ்க்கையைப் பெற வழிசெய்யும் ஒரு நிலையான, கட்டொழுங்கான சமுதாயத்தில், எல்லாரும் தங்களை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் ஒரு நேர்மையான, செயல்திறன்மிக்க, ஆற்றல்வாய்ந்த அரசாங்கமே என் கொள்கை...”

- லீ குவான் இயூ, தோக்கியோவில் கிரியேட் 21 அஸாஹி மாநாட்டில் வழங்கிய சிறப்புரை, 20 நவம்பர் 1992

மூத்த அரசியல் மேதை

லீ குவான் இயூ 1990ஆம் ஆண்டு பிரதமர் பதவியிலிருந்து விலகினாலும், தொடர்ந்து அமைச்சரவையில் மூத்த அமைச்சராகப் பதவி வகித்தார். 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் லீ சியன் லூங் திரு கோ சொக் டொங்கிடமிருந்து பிரதமர் பதவியை ஏற்றபோது, லீ குவான் இயூ மதியுரை அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2011ஆம் ஆண்டு அவர் அமைச்சரவையிலிருந்து ஓய்வுபெறும்வரை அந்தப் பதவியில் பணியாற்றினார். பிரதமர் பதவியிலிருந்து விலகிய பிறகும், அவர் அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் அவரின் தாக்கம் உணரப்பட்டது. இந்தக் காலத்தில்தான் அவரது வாழ்க்கை வரலாற்று நூல் இரு பாகங்களாக வெளிவந்தது. அது ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ், பிரெஞ்சு உட்பட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. ஆசியாவின் உன்னத மூத்த அரசியல் மேதையின் மீது உலகம் கொண்டிருந்த பற்றார்வத்தை அது பிரதிபலித்தது.

அரும்பெருஞ்சாதனை

லீ குவான் இயூவின் அரும்பெருஞ்சாதனை சிங்கப்பூர். தன் சக குடிமக்கள் மேம்படவேண்டும் என்பதற்காகவே தன் ஒவ்வோர் அணுவிலும் இருந்த திறமைகளையும் சக்தியையும் முழுமையாகவும் முழுமூச்சுடனும் அவர் அர்ப்பணித்தார். ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுள்ள ஒரு நியாயமான, நேர்மையான சமுதாயத்தில் அவர் நம்பினார். “இனம், மொழி, மதம் என்ற பாகுபாடின்றி நாம் ஒரு மக்களாக” இருக்க முடியும் என்று நம்பினார். அரசாங்கம் நல்லது செய்யவேண்டுமெனில் அது நேர்மையாகவும் வலுவாகவும் இருக்கவேண்டும் என்று நம்பினார். இதனால், அவர் சட்ட விதிகள், தகுதியாட்சி முறை, முற்றிலும் ஊழலற்ற சமுதாயம் ஆகியவற்றை வலியுறுத்தினார். லீ குவான் இயூவும் அவர்தம் தலைமுறைத் தலைவர்களும் அமைத்த இந்த உறுதியான அஸ்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இனிவரும் பல்லாண்டுகளுக்கும் சிங்கப்பூர் தொடர்ந்து செழித்தோங்கும்.

நகர மண்டப அறையில் லீ குவான் இயூ மூத்த அமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வதைப் பிரதமர் கோ சொக் டொங்கும் அதிபர் வீ கிம் வீயும் நேரில் காண்கின்றனர், 28 நவம்பர் 1990

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

அதிபர் எஸ் ஆர் நாதன் லீ குவான் இயூவுக்கு மதியுரை அமைச்சர் பதவிக்கான நியமன ஆவணம் அளிப்பதை பிரதமர் லீ சியன் லூங் நேரில் காண்கிறார், 12 ஆகஸ்ட் 2004

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

கிம் மோ குடியிருப்புப் பேட்டையில் குடியிருப்பாளர்களைச் சந்திக்கிறார், 8 செப்டம்பர் 1991

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

1997ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தன்று ஆதரவாளர் ஒருவருக்கு நன்றி தெரிவிக்கிறார், 23 டிசம்பர் 1996

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் ஜான் எஃப் கென்னடி அரசாங்கத் துறை பள்ளியில் முதல் கோலின்ஸ் குடும்ப அனைத்துலக ஆய்வுநிலை மாணவர் சொற்பொழிவு நிகழ்வில் உரையாற்றுகிறார், 18 அக்டோபர் 2000

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதன் நிலைத்தன்மையும் நல்ல அரசாங்கமும் முக்கியம் என்பது பற்றித் திரு லீ பேசினார்.

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

மூன்றாம் உலகிலிருந்து முதல் உலகுக்கு (From Third World to First) என்ற தமது வாழ்க்கை வரலாற்று நூல் இரண்டாம் பாகத்தின் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகிறார், 16 செப்டம்பர் 2000

தொடர்பு, தகவல் அமைச்சின் சேகரிப்பு,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆதரவுடன்

அமெரிக்கா-ஆசியான் வர்த்தக மன்றத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு இரவு விருந்தில் அமெரிக்க பிரமுகர்கள் லீ குவான் இயூவுக்கு மரியாதை செலுத்துகின்றனர், 27 அக்டோபர் 2009

இடமிருந்து: டாக்டர் லீ வெய் லெங், அமெரிக்க செனட்டர் ஜிம் வேப், மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ, அமெரிக்க-ஆசியான் வர்த்தக மன்றத்தின் முன்னாள் தலைவர் ஜார்ஜ் டேவிட், அமெரிக்காவுக்கான சிங்கப்பூர்த் தூதர் சான் ஹெங் சீ, முன்னாள் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹென்ரி கிசிங்கர், மற்றும் செனட்டர் கிறிஸ்தஃபர் பாண்டின் துணைவியார் லிண்டா பாண்ட்

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் ஆதரவுடன்

லீ குவான் இயூ, 23 நவம்பர் 2004

தாரா சொஸ்ரொவார்டொயொ எடுத்த நிழற்படம்,
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சேகரிப்பு